Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா : 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 11 (27 - 09 - 1991) வெள்ளிக்கிழமை ஓசை: 211

## இராணுவத்தினரின் பாவனைக்கு கயரோக வார்ட்டும் ஒதுக்கீடு

[கொழும்பு]

மணலாறு மோதலில் காயமடைந்துவரும் இராணுவ வீரர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக அநுராதபுரம் வைத்தியசாலையில் மேலும் பல வார்ட்டுகள் ஒதுக்கப்படவிருப்பதாகத் தெரிய வருகிறது. ஏலவே உள்ள இராணுவ வார்ட்டுக்கு மேலதிகமாக பிக்குகளுக்கென ஒதுக்கப்பட்ட அறைகள் மனநோயாளர் வார்ட்டுகள் கயரோக வாட்டுகள் என்பனவேஇராணுவ வீரர்களுக்காக ஒதுக்கப்படவிருக்கின்றன. கொழும்பு இராணுவ வைத்தியசாலை, பனாகொடை இராணுவ முகாம் வைத்தியசாலை, ஜெயவர்த்தனபுர வைத்தியசாலை (4ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வரலாற்றுப் பாத்திரமான திலீபன்

### வீரவணக்கம்

#### சின்னமருது

மணலாறு மாவட்டத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் 25-09-91 அன்று விடுதலைப் புலிகளைச் சேர்ந்த சின்ன (4ஆம் பக்கம் பார்க்க)

#### முதூரில் தாக்குதல்

மூதூரிலுள்ள பிரதான இராணுவ முகாமிலிருந்து ரோந்துக்காக சென்ற இரா (4ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் பிரதித்தலைவர் மகேந்திரராசா



(நமது நிருபர்)

'அசைய முடியாத ஒரு நெருக்கடியில் எமதுவிடுதலைப்போராட்டம் இருந்தவேளை இந்திய அரசு தனது நலனுக்காக தமிழ் மக்களைப் பலியிடத் தயாரான போது தமிழீழ மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டிய வரலாற்றுக் கடமையை திலீபன் தொடங்கினான் இதன் மூலம் எங்கள் போராட்டத்தில் ஒரு வரலாற்றுப் பாத்திரத்தைத் திலீபன் வகுத்தான்.'

இவ்வாறு நேற்றுமாலை நல்லூரில் நடைபெற்றதியாகி திலீபன் நான்காமாண்டு நினைவு இறுதி நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா தெரிவித்தார் அவரின் இப்பேச்சின் முழு விபரமும் வருமாறு:

எங்களிடையே வாழ்ந்து ஒரு உயர்ந்த - உன்னதமான, இலட்சியத்திற்காக உணவை நீரைமறுத்துசாகும்வரையான உண்ணா நோன்பு போராட்டத்தை நடத்திய திலீபன், தியாக மரணமடைந்த நாள் இன்று ஆகும்.

### அசையமுடியாத நிலையில் போராட்டம்

கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பு இருந்த நிலையை நினைத்துப் பார்க்கிறேன். எங்கள் விடுதலைப் போராட்டத்தின் நியாயங்களை, தர்மங்களைப் புரிந்து கொள்ளாமல், இந்திய அரசு தன் படைகளை இங்கு குவித்திருந்தது. அதே நேரம், சிறிலங்கா அரசோ தன் அடக்குமுறைவடிவங்களை மேலும் பலமாக்கிக் கொண்டிருந்தது. அந்த நிலையில், எமது விடுதலைப் போராட்டம் அசைய முடியாத நெருக்கடிக்குள் நின்றது.

இந்த நிலையில் தான், திலீபன் - தனது உண்ணா நோன்புப் போராட்டத்தை ஆரம்பிக்கின்றான். அகிம்சையின் தந்தை என்று வர்ணிக்கப்படும் காந்தியின் தேசத்திற்கு அதன் வழியிலேயே போராட்டத்தின் முதலடியை திலீபன் தொடுத்தான்.

(3ஆம் பக்கம் பார்க்க)

### ஆயிரக்கணக்கான மக்கள் நல்லூரில் உண்ணாவிரதம்

தியாகி திலீபனின் நான்காவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு உண்ணாவிரதமும் மாபெரும் பொதுக் கூட்டமும் திலீபன் உண்ணாவிரதமிருந்த நல்லூர் ஆலய முன்றலில் நேற்றுஇடம் பெற்றது.

நேற்றுக்காலை எட்டுமணியளவில் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் வினோதன் தீபமேற்றி ஆரம்பித்து வைத்த உண்ணாவிரதம் பிற்பகல் நான்கு மணியளவில் தமிழீழ காவல் துறைத் திரு. நடேசனின் திலீபன் நினைவுரையை அடுத்து நிறைவேறியது. இவ் உண்ணாவிரதத்தில் பெருந்திரளான பொது மக்கள் கலந்து கொண்டனர். இங்கு பல எழுச்சிக் கவிதைகளும் வாசிக்கப்பட்டன.

இந்த உண்ணாவிரத (4ஆம் பக்கம் பார்க்க)

### திலீபன் நினைவாக தூக்குக் காவடி

## இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பிரேமதாசாவின் முயற்சிகளை சீர்குலைக்க எதிர்க்கட்சியினர்திட்டம்

- தொண்டமான்

இனப்பிரச்சினையின் தீர்வுக்கு பாராளுமன்ற தெரிவுக் குழு அமைக்க முன்வந்ததும் மற்றும் இனப்பிரச்சினை தீர்வில் உண்மையான அக்கறையுடன் செயற்படும் ஜனாதிபதிபிரேமதாசாவின் முயற்சிகளைசீர்குலைப்பதுவே நாஎதிர்க் கட்சிகள் அரசுக்கெதிராக மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் உள்நோக்கம் என்று அமைச்சர் தொண்டமான் கூறியுள்ளார். கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு பேட்டி அளித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் உள்நோக்கம் கொண்ட சக்திகளே அரசுக்கு எதிரான நடவடிக்கையில் இறங்கியிருப்பதாகவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர் ஒருவர் இதன் பின்னணியில் திட்டம் தீட்டியவராகவும் தெரிவித்துள்ளார்.

## கப்டன் அக்காச்சி குடியிருப்பு; விமரிசையாக நேற்று திறப்பு

கப்டன் அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு திறப்பு விழா நேற்று வெகு விமரிசையாக நடைபெற்றது இந் நிகழ்ச்சி யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மாறன் தலைமையில் நடைபெற்றது.

மங்கள வாத்தியம் இசைக்க மாலை 7 மணிக்கு யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மாறன். கப்டன் அக்காச்சியின் திரு உருவப்படத்தை திரை நீக்கம் செய்து வைத்தார். இதன் பின் மக்களின் பலத்த கரகோஷத்தின் மத்தியில் சிறுமி ஒருவரால் வழங்கப்பட்ட கத்தரிக் கோலினால் நாடாவை வெட்டி புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு வீடொன்றின் நீளமான குடியிருப்பு வீதியையும் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் மக்கள் மு (4ம் ஆம் பக்கம் பார்க்க)

## எம். பிக்களை அனுப்புவதால் மக்களின்

இராணுவ முகாமிலிருந்து
ரோந்துக்காக சென்ற இரா
(4ஆம் பக்கம் பார்க்க)

# நல்லூரில் பிரதித்தலைவர் மகேந்திரராசா



(நமது நிருபர்)

'அசைய முடியாத ஒரு நெருக்கடியில் எமது விடுதலைப்போராட்டம் இருந்தவேளை இந்திய அரசு தனது நலனுக்காக தமிழ் மக்களைப் பலியிடத் தயாரான போது தமிழீழ மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டிய வரலாற்றுக் கடமையை திலீபன் தொடங்கினான் இதன் மூலம் எங்கள் போராட்டத்தில் ஒரு வரலாற்றுப் பாத்திரத்தைத் திலீபன் வகுத்தான்.'

இவ்வாறு நேற்றுமாலை நல்லூரில் நடைபெற்ற தியாகி திலீபனின் நான்காமாண்டு நினைவு இறுதி நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா தெரிவித்தார் அவரின் இப்பேச்சின் முழு விபரமும் வருமாறு:

எங்களிடையே வாழ்ந்து ஒரு உயர்ந்த - உன்னதமான, இலட்சியத்திற்காக உணவை நீரை மறுத்துசாகும்வரையான உண்ணா நோன்பு போராட்டத்தை நடத்திய திலீபன், தியாக மரணமடைந்த நாள் இன்று ஆகும்.

## அசையமுடியாத நிலையில் போராட்டம்

கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பு இருந்த நிலையை நினைத்துப் பார்க்கிறேன். எங்கள் விடுதலைப் போராட்டத்தின் நியாயங்களை, தர்மங்களைப் புரிந்து கொள்ளாமல், இந்திய அரசு தன் படைகளை இங்கு குவித்திருந்தது. அதே நேரம், சிறிலங்கா அரசோ தன் அடக்குமுறைவடிவங்களை மேலும் பலமாக்கிக் கொண்டிருந்தது. அந்த நிலையில், எமது விடுதலைப் போராட்டம் அசைய முடியாத நெருக்கடிக்குள் நின்றது.

இந்த நிலையில் தான், திலீபன் - தனது உண்ணா நோன்புப் போராட்டத்தை ஆரம்பிக்கின்றான். அகிம்சையின் தந்தை என்று வர்ணிக்கப்படும் காந்தியின் தேசத்திற்கு அதன் வழியிலேயே போராட்டத்தின் முதலடியை திலீபன் தொடுத்தான்.

(3ஆம் பக்கம் பார்க்க)

## ஆயிரக்கணக்கான மக்கள் நல்லூரில் உண்ணாவிரதப்

தியாகி திலீபனின் நான்காவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு உண்ணாவிரதமும் மாபெரும் பொதுக் கூட்டமும் திலீபன் உண்ணாவிரதமிருந்த நல்லூர் ஆலய முன்றலில் நேற்று இடம் பெற்றது.

நேற்றுக்காலை எட்டுமணியளவில் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் வினோதன் தீபமேற்றி ஆரம்பித்து வைத்த உண்ணாவிரதம் பிற்பகல் நான்கு மணியளவில் தமிழீழ காவல்துறை திரு. நடேசனின் திலீபன் நினைவுரையை அடுத்து நிறைவேறியது. இவ் உண்ணாவிரதத்தில் பெருந்திரளான பொது மக்கள் கலந்து கொண்டனர். இங்கு பல எழுச்சிக் கவிதைகளும் வாசிக்கப்பட்டன.

இந்த உண்ணாவிரத

(4ஆம் பக்கம் பார்க்க)

## திலீபன் நினைவாக தூக்குக் காவடி

தியாகி திலீபனின் நான்காவது ஆண்டு நினைவுநாளின் இறுதிநாளான நேற்று வடபகுதி முழுவதும் நினைவு கூரப்பட்டது. பெரும்பாலான வீடுகளின் முன்பாக விசேட நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டு, அவற்றில் தியாகி திலீபனின் திருவுருவப் படத்திற்கு மலர்கள் தூவியும் மலர் மாலை சாத்தியும் இருக்கக் காணப்பட்டது.

கைதடியில் இருந்து தூக்குக் காவடி எடுத்து ஊர்தி பவனியாக மக்கள் நல்லூரை வந்தனர் ஒரு கையில் புலிக் கொடியும் மறு கையில் வேலும் தாங்கி துலாக் காவடியில் ஒருவர் அசைந்தபடி நண்பகலளவில் நல்லூரை வந்தடைந்தார். குடா நாட்டின் பல பாகங்களிலும் இருந்து புறப்பட்ட ஊர்திகள் நண்பகலளவில் நல்லூரை வந்தடைந்தன.

மேலும் தட்டாதெருச் சந்திக்கு சமீபமாக தியாகி திலீபன் திருவுருவப் படத்திற்கு முன்பாகப் பொங்கிப், பொங்கல் படைக்கப்பட்டிருந்தமையினையும் அவதானிக்க முடிந்தது அதே வேளை தியாகி திலீபன் திருவுருவப்படத்தை தாங்கிய ஊர்தி பவனிவந்த போது ஆங்காங்கே மக்கள் மலர் தூவியும் தேங்காய் உடைத்தும் மக்கள் ஆராதனை செய்தமையினைக் காண முடிந்தது.

## நேற்றைய மோதலில் 14 இராணுவம் படுகாயம்

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் விமானக் குண்டுவீச்சும் மோதலும் நேற்றும் தொடர்ந்தும் இடம் பெற்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மணலாறு மாவட்டத்தில் இம்மோதல் சுமார் ஒரு மாத காலமாக இடம் பெற்று வருவது தெரிந்ததே.

நேற்று நடைபெற்ற மோதலில் ஒரு இராணுவ அதிகாரி உட்பட 14 இராணுவத்தினர் படுகாயம் அடைந்துள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான

# பிரேமதாசாவின் முயற்சிகளை சீர்குலைக்க எதிர்க்கட்சியினர்திட்டம்

\- தொண்டமான்

இனப்பிரச்சினையின் தீர்வுக்கு பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்க முன்வந்தும் மற்றும் இனப்பிரச்சினை தீர்வில் உண்மையான அக்கறையுடன் செயற்படும் ஜனாதிபதி பிரேமதாசாவின் முயற்சிகளை சீர்குலைப்பதுவே எதிர்க்கட்சிகள் அரசுக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் உள்நோக்கம் என்று அமைச்சர் தொண்டமான் கூறியுள்ளார். கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு பேட்டி அளித்த அவர் மேலும் குறுகிய உள்நோக்கம் கொண்ட சக்திகளே அரசுக்கு எதிரான நடவடிக்கையில் இறங்கியிருப்பதாகவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர் ஒருவர் இதன் பின்னணியில் திட்டம் தீட்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# கப்டன் அக்காச்சி குடியிருப்பு; விமரிசையாக நேற்று திறப்பு

கப்டன் அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு திறப்பு விழா நேற்று வெகு விமரிசையாக நடைபெற்றது இந் நிகழ்ச்சி யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மாறன் தலைமையில் நடைபெற்றது.

மங்கள வாத்தியம் இசைக்க மாலை 7 மணிக்கு யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மாறன் கப்டன் அக்காச்சியின் திரு உருவப்படத்தை திரை நீக்கம் செய்து வைத்தார். இதன் பின் மக்களின் பலத்த கரகோஷத்தின் மத்தியில் சிறுமி ஒருவரால் வழங்கப்பட்ட கத்தரிக் கோலினால் நாடாவை வெட்டி புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு கிலோ மீற்றர் நீளமான குடியிருப்பு வீதியையும் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் மக்கள் முன்

(4ஆம் பக்கம் பார்க்க)

# எம். பிக்களை அனுப்புவதால் மக்களின் சுமைகள் குறையுமா என சிந்திக்கிறோம்

\- அன்ரன் பாலசிங்கம்

(நமது நிருபர்)

தமிழ் மக்கள் மீது உள்ள நெருக்குதல்களையும் பொருளாதாரச் சுமைகளையும் யாழ். மாவட்ட சுயேச்சை எம்.பிக்களை நியமிப்பதன் மூலம் தீர்க்கலாமா என நாம் சிந்தித்து வருகிறோம். அவ்வாறு தீர்க்கலாம் என்றால் அவர்களைப் பாராளுமன்றம் அனுப்பலாம் ஆனால், இவ்விடயம் பற்றி நாம் இன்னமும் தீர்க்கமான முடிவு எடுக்கவில்லை என நேற்று மாலை நல்லூரில் நடைபெற்ற தியாகி திலீபன் நான்காம் ஆண்டு நினைவு இறுதி நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் எமது போராட்டப் பாதை எங்கு செல்கின்றது, நாம் எங்கு நிற்கின்றோம், இன்றைய அரசியல் இராணுவ நிலைமை என்னவாக இருக்கின்றது, பேச்சுவார்த்தைக்கு சாத்தியம் இருக்கின்றதா, பேச்சுவார்த்தை எமது பிரச்சினைகளைத் தீர்க்குமா, இப் போராட்டம் எவ்வளவு காலத்திற்கு இப்படி இழுபட்டுப் போகப் போகின்றது? இவ்வாறான பல கேள்விகள் எமது மக்கள் மத்தியில் எழுந்து நிற்கின்றது. இன்றைய சூழ்நிலையில் ஒரு முனையில்



சிறிலங்கா இராணுவத்தினுடன் இராணுவ ரீதியாகப் போராடிக் கொண்டிருக்கின்றோம். இதற்காக நூற்றுக் கணக்கான போராளிகள் வீர மரணமடைந்துள்ளனர்.

மக்கள் பெரும்பளு சுமக்கின்றனர்

மறுபுறத்தில் பேச்சுவார்த்தைக்கான சில முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. நாம் இன்றைய இக் கூட்டத்திற்கு வருவதற்கு முன்னர் எமது தலைவர் பிரபாகரனுடன் இன்றைய நிலைமை பற்றி விரிவாக ஆராய்ந்தோம். அப்போது அவர் இன்று தமிழ் மக்கள் மீது பெரிய பளு ஏறி இருக்கின்றது. பொருளாதார ரீதியாக எமது மக்கள் மிகவும் கஷ்டமடைகின்றனர்? விலைவாசி உயர்வு, அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்கவில்லை.

(3ஆம் பக்கம் பார்க்க)

# வழிபாட்டிற்குரியவனாக மக்கள் மனங்களில் திலீபன்

\- பாலகுமாரன்

திலீபனின் தியாக உணர்வு திலீபனை வழிபாட்டிற்குரியவனாக மக்கள் போற்றும் அளவுக்கு உயர்த்தியிருக்கின்றது. திலீபனைப் போற்றும் இந்த உணர்வு காலக்கிரமத்தில் திலீபனை மக்களிடமிருந்து வேறுபட்டவனாக அன்னியப்படுத்தி விடக்கூடாது. இதற்காக மக்கள் அனைவரும் தியாக உணர்வுடன் போராட்டத்துடன் தம்மை இணைத்துக்கொள்ள வேண்டும் இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரமுகர் திரு பாலகுமார் நேற்று நல்லூரில் தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவாக நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் உரை நிகழ்த்தும் போது தெரிவித்தார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்காவிடம் இருந்து திடமான யோசனை இல்லை

விடுதலைப்புலிகள் விவகாரத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து சிறிலங்கா அரசாங்கத்திடம் இருந்து திட்டவட்டமான யோசனை எதுவும் இதுவரை வரவில்லை என்று இந்திய

(4ஆம் பக்கம் பார்க்க)

# TACEP SEPT 1991

Admission to the

"Advanced Proficiency in English"

**Course October 1991**

சென்ற இருவருடங்களாக எம்மால் நடாத்தப்பட்ட TACEP வகுப்புகளின் இறுதிப்பரீட்சைகளிற் சித்தியடைந்து சான்றிதழ் பெற்றோர் அனைவரும் இம்முறை வேம்படி மகளிர் கல்லூரி நிலையத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படும் "Advanced Proficiency in English" என்னும் ஆங்கிலப் பாடநெறிக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றோராவர்.

விண்ணப்ப படிவத்தின் விபரம் பின்வருமாறு:

Admission to the Advanced Proficiency in English Course Oct. 1991

(1) Full Name:
(2) Address:
(3) Details regarding the Performance at the Achievement Test:

(a) Year: ........
(b) Marks Obtained:.........
(c) Grade Obtained: .......
(d) Date of Issue of the Certificate

விண்ணப்பங்கள் 01-10-91க்கு முன்னதாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். வகுப்புகள் 05-10-91 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகும்.

Mr. N. Thevapalasingham
Regional Co-ordinator(N R)
TACEP Programme
Vembady Girls High School,
Jaffna.

(R-1780)

## விசேட அறிவித்தல்

### TACEP Sept. 1991

மேற்படி ஆங்கில நெறி வகுப்புக்குரிய தகுதிகாண் பரீட்சைக்கு (Placement Test) தோன்றிய பரீட்சார்த்திகள் அனைவரும் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு தத்தமக்கென விதிக்கப்பட்ட பாடசாலைகளுக்குத் தங்கள் அனுமதி அட்டைகளுடன் தவறாது சமூகம் தரும்படி அழைக்கப்படுகின்றார்கள்.

அந்நிலையங்கள் பின்வருமாறு:

1) யாழ். இந்துக்கல்லூரி
2) யாழ் வேம்படி மகளிர் கல்லூரி
3) இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்

**முக்கிய கவனிப்பு**

முன் அறிவித்தபடி மற்றும் நிலையங்களுக்குப் போதிய விண்ணப்பங்கள் கிடைக்காமையால் அந்நிலையங்கள் எக்காரணம் பற்றியும் இம்முறை இயங்கமாட்டா.

நா. தேவபாலசிங்கம்
மாநில இணைப்பாளர்
Jaffna Tacep Programme

(R/1780)

## 'களம்பலகண்ட' வரலாற்று நாடகம்

யாழ். வான்மதி கலாலயத்தின் "களம்பலகண்ட" இசை கூரை வரலாற்று நாடகம் நாளை 28ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6-45க்கு சென்ரோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி நாடகத்தை கண்டுகளிக்க அனைவரையும் திரண்டு வருமாறு சென்ரோக்ஸ் சனசமூக நிலையத்தினர் கேட்டுக் கொள்கின்றனர்.

## மக்கள் அஞ்சலி

மணலாறு நேரடி மோதலில் கடந்த ஞாயிறன்று (22-9-91) வீரமரணமடைந்த ராஜினியின் (குயின்மதி மா தியாகராசா) புகழுடல் (24-9-91) கடந்த செவ்வாய்க்கிழமை காலை அவரது இல்லத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருந்தது.

நூற்றுக் கணக்கான பெண்கள், ஆண்கள், சிறுவர், இளைஞர்கள் யாழ். இராசாவின் தோட்டம் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

## ஆசிரியர் தினத்தன்று மாணவர் ஓவியப் போட்டி

யாழ். கல்வித்திணைக்களம் ஒக்ரோபர் 6 உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் ஓவியப் போட்டியொன்றை நடாத்தவுள்ளது. இப்போட்டிக்குரிய தொனிப்பொருள் 'எனது பார்வையில் ஓர் ஆசிரியர்' என்பதாகும். பாலர், கீழ், மத்திய, மேற்பிரிவுகளாக இப்போட்டி நடாத்தப்படும். மாணவரின் மனதிற் பதியும் ஓர் ஆசிரியரை அவர் குண நலன்களை வெளிப்படுத்தும் வண்ணம் ஓவியங்களை வரைந்து யாழ். கல்விப் பணிப்பாளருக்கு எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறும் தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்களுக்கு ஆசிரியர் தினத்தன்று சான்றிதழ்களும், விருதுகளும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு)

## அவசரப் பொதுக் கூட்டம்

(நமது நிருபர்)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தின் அவசர பொதுக் கூட்டமொன்று இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் நான்கு மணியளவில் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. முக்கியமான சில தீர்மானங்கள் அறிவிக்கப்படவுள்ளதால் சகல கோட்டப் பொதுச்சபை உறுப்பினர்களும் அங்கத்துவ சகல ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தயவான வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### திரு. சவிரிமுத்து கிறிஸ்ரி

சவிரிமுத்து கிறிஸ்ரி 26-09-91 காலை காலமாகிவிட்டார். இவர் சவிரிமுத்து அன்னம்மாவின் மகனும் நீற்றா மகேஸ்வரியின் அன்புக் கணவரும், மோகன், ரஞ்சன், மிலன், வசந்தன், அகிலன், சாந்தி, பபித்ரா ஆகியோரின் அன்புத் தந்தையும் அல்பிரட், செல்வராஜா, அமிர்தராஜா, செல்வரத்தினம், மரியநாயகம், புஷ்பசிலி ஆகியோரின் அன்புச்சகோதரரும், ராஜேஸ்வரி, ஞானவல்லி, யோகேஸ்வரி, தனேஸ்வரி, தனேந்திரன் ஆகியோரின் மைத்துனரும், ராசேந்திரம், மரியம்மாவின் மருமகனும், றொஷானி, லின்டன், டினேசா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 27-09-91 இன்று மாலை 3-00 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து யாழ் புனித அடைக்கலநாயகி ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இரங்கற் பாடற்பூஜை ஒப்புக் கொடுத்த பின் யாழ் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

99/13 ஸ்ரேசன்லேன்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி
சி. நீற்றா மகேஸ்வரி

(R/1783)

## வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கான விரிவுரைகள்
1st IN COM.
ஆரம்பம்: 5.10.1991 காலை 8.00 மணி
G. A. Q விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கான
G. A. Q. G. S. Q
ஆண்டு 91, 92 இதற்கான விரிவுரைகள்
ஆரம்பம்: 5.10.1991 காலை 10.00 மணி

**புதிய உயர் கல்லூரி**
**(NEW COLLEGE OF HIGH STUDIES)**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(B/3176)

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் அவசர பொதுக்கூட்டம்

இடம்: நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்.
காலம்: 27-9-91 வெள்ளி [இன்று] பி.ப 4-00 மணி

முக்கிய தீர்மானங்கள் அறிவிக்கப்படவுள்ளமையினால் சகல கோட்டத்து ஆசிரியர்களையும் இயக்குநர்களையும் தவறாது வந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

பொதுச் செயலாளர்
(யாழ். மாவட்டம்)

(R/1781)



# செஞ்சிலுவைச் சங்கம்

இருளை அகற்றி, துன்பங்களுக்கு முகம் கொடுக்கின்றது.

இருளை அகற்றி ஒளி ஏற்றிட



வட மாவட்டங்களிலுள்ள மக்களின் கண்ணீரைத் துடைத்திட செஞ்சிலுவைச் சங்கத்தின்...

(b) Marks Obtained:.........
(c) Grade Obtained: ......
(d) Date of Issue of the Certificate

விண்ணப்பங்கள் 01-10-91க்கு முன்னதாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். வகுப்புகள் 05-10-91 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகும்.

Mr. N. Thevapalasingham
Regional Co-ordinator(N R)
TACEP Programme
Vembady Girls High School,
Jaffna.

(R-1780)

---

## வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கான விரிவுரைகள்
1st IN COM.
ஆரம்பம்: 5.10.1991 காலை 8.00 மணி
G. A. Q விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கான
G. A. Q. G. S. Q
ஆண்டு 91, 92 இதற்கான விரிவுரைகள்
ஆரம்பம்: 5.10.1991 காலை 10.00 மணி

**புதிய உயர் கல்லூரி**
**(NEW COLLEGE OF HIGH STUDIES)**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(B/3176)

---

சவிரிமுத்து இறின்ஸ் 26-09-91 காலை காலமாகிவிட்டார். இவர் சவிரிமுத்து அன்னம்மாவின் மகனும் நீற்றா மகேஸ்வரியின் அன்புக் கணவரும், மோகன், ரஞ்சன், மிலன், வசந்தன், அகிலன், சாந்தி, பபித்ரா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆல்பிரட், செல்வராஜா, அமிர்தராஜா, செல்வரத்தினம், மரியநாயகம், புஸ்பசீலி ஆகியோரின் அன்புச்சகோதரரும், ராஜேஸ்வரி, ஜெனைவரி, மகேஸ்வரி, தனேஸ்வரி, தனேந்திரன் ஆகியோரின் மைத்துனரும், ராசேந்திரம், மரியம்மாவின் மருமகனும், றொஷானி, வின்டன், டினோ ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 27-09-91 இன்று மாலை 3-00 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து யாழ் புனித அடைக்கலநாயகி ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இரங்கற் பாடற்பூஜை ஒப்புக் கொடுத்த பின் யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

தகவல்:
மனைவி
நீற்றா மகேஸ்வரி

99/13 ஸ்ரேசன்லேன்,
யாழ்ப்பாணம்.

(R/1783)

---

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
## அவசர பொதுக்கூட்டம்

இடம்: நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்.
காலம்: 27-9-91 வெள்ளி [இன்று] பி.ப 4-00 மணி

முக்கிய தீர்மானங்கள் அறிவிக்கப்படவுள்ளமையினால் சகல கோட்டத்து ஆசிரியர்களையும் இயக்குநர்களையும் தவறாது வந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

பொதுச் செயலாளர்
(யாழ். மாவட்டம்)

(R/1781)

---

# செஞ்சிலுவைச் சங்கம்



இருளை அகற்றி, துன்பங்களுக்கு முகம் கொடுக்கின்றது.

இருளை அகற்றி ஒளி ஏற்றிட



வட மாவட்டங்களிலுள்ள மக்களின் கண்ணீரைத் துடைத்திட செஞ்சிலுவைச் சங்கத்தின் சேவையை நிறைவேற்றிட உங்களின் தாராள அன்பளிப்பை நல்குக.

## இவ்வாரம் செஞ்சிலுவை செம்பிறை கொடிவாரம்

### எம் சேவைகள்

| | | |
|---|---|---|
| உயிர்காப்பு! | முதலுதவி! | இரத்த தானம்! |
| வைத்திய சேவை! | தொண்டர் சேவை! | அகதிகள் சேவை! |
| உள்ளூர் உற்பத்தி ஊக்குவிப்பு! | சுயதொழில் முயற்சிகள்! | பொருளாதாரதன்னிறைவு! |
| கல்விச்சேவை! | சமூக அபிவிருத்தி! | தன்னிறைவான சமுதாயம்! |

உங்கள் அன்பளிப்புக்கள் நம் நாட்டிற்கு நன்மை தரும்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
26-09-91

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
வட மாவட்டங்கள்.

(B/3201)

---

# நினைவு கூருகின்றோம்...

**1991 09 27**

1988ஆம் ஆண்டு இதேதினத்தில் கணேசபுரத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டினால் எமைப்பிரிந்த

**மோகன்** (சோமசுந்தரம் விமலதாஸ் - தவசியூர் ஓமந்தை)

1990 ஆம் ஆண்டு மாங்குளம் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் வீரமரணமடைந்த

**அருள்** (வேலுப்பிள்ளை சிவகுமாரன் - மருதோடை, நெடுங்கேணி)

மட்டக்களப்பு குறிஞ்சாமுனைப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இரு தமிழர்கள்

யாழ்ப்பாணத்தில் உதயன் நாளிதழ் காரியாலயத்தின் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலினால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/3199)

சிந்தனைக்கு

உனக்கு என்ன அவக்கேடு நேரிட்டாலும் அது உன் கைகள் ஆற்றியுள்ள ஒரு செயலின் விளைவுதான்.

— டி. எஸ். எலியட்

ஈழநாதம்

21, [illegible] வீதி, யாழ்ப்பாணம் 27-09-1991
[illegible]
[illegible]

# பிரேமதாஸாவிற்குப் புதிய நெருக்கடி

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை சிறிலங்கா பாராளுமன்றச் சபாநாயகரிடம் எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று முன்தினம் சமர்ப்பித்தார். இப்பிரேரணையில் [illegible] எதிர்க்கட்சிகள் கைச்சாத்திட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்த பிரேமதாஸா அதிருப்தியாளர்களும், எதிர்க்கட்சியினரும் இணைந்து கொண்டு வந்த சிறிலங்கா ஜனாதிபதி குற்றவிசாரணை கோரும் மனு உடனடியாக பாராளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படாத நிலையில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது.

சிறிலங்கா ஜனாதிபதி ஒருவரைப் பதவி நீக்கக் கோரும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படுவது மிகவும் சிக்கல் வாய்ந்ததாகும். அரசியல் அமைப்புச் சட்டத்தின் படி ஜனாதிபதி மிகவும் பலமான நிலையிலேயே உள்ளார். பாராளுமன்றத்தில் அவருக்கு எதிரான மூன்றில் இரண்டு பெரும்பான்மையும், நீதிமன்றத் தீர்ப்பும் தேவை யாகும்.

இந்நிலையில், சிறிலங்கா ஜனாதிபதிக்கு வேறு ஒரு வழியில் நெருக்கடியை அதிகரிக்கவே நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது. நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று பாராளுமன்றத்தில் கொண்டு வர சாதாரண பெரும்பான்மைப் பலம் ஒன்றே போதுமானதாகும்.

225 ஆசனங்களைக் கொண்ட ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியினரின் கூற்றுப்படி 113 ஆசனங்கள் மட்டுமே உள்ளன. சிறிலங்கா ஜனாதிபதிக்கு ஆதரவாக 116 பாராளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்டிருப்பினும் பின்னர் மூவர் வெளியேறி விட்டனர். அத்துடன் 113 பேரில் சிலர் அதிருப்தியாளர்களின் அணியில் சேரக் கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நிலையில், நம்பிக்கையில்லாப் பிரேரணையை அரசாங்கத்திற்கு எதிராக நிறைவேற்றி விடலாம் என எதிர்க்கட்சிகள் எண்ணுகின்றன.

சிறிலங்கா பாராளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சிகளும், திரு. பிரேமதாஸா அதிருப்தியாளர்களும் பொதுத் தேர்தல் ஒன்றை விரும்பவில்லை. தற்பொழுதுள்ள நிலையிலேயே திரு. பிரேமதாஸாவிற்கு ஆதரவளிக்கும் ஐ. தே. கட்சி அரசாங்கத்தைக் கவிழ்த்து விடலாம் என அவை கருதுகின்றன. அதன் காரணமாகவே பாராளுமன்றக் கலைப்பையும் எதிர்க்கின்றன.

எதிர்க்கட்சிகள் தற்பொழுது கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை வழமையாகக் கொண்டு வரும் நம்பிக்கையில்லாப் பிரேரணை போல் நோக்கக் கூடாது. [illegible]

## மகிழனுக்கு மக்கள் அஞ்சலி

(கொழும்புத்துறை)

மணலாறு மாவட்டத்தில் கடந்த 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நேரடிமோதலில் வீரமரண மடைந்த வீரவேங்கை மகிழன் (ராமலிங்கம் பொன்குமார், கொழும்புத்துறை) ஆகிய போராளியின் புகழுடல் நேற்று வியாழக்கிழமை நண்பகல் கொழும்புத்துறை 3 ஆம் குறுக்குத்தெருவில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.

மகிழனின் புகழுடலுக்கு பெரும் திரளான மக்களும் பொது அமைப்பு பிரதிநிதிகளும் மலர் வளையம் சாத்தி தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

வீதிகள் தோறும் தோரணங்கள் கட்டி, மக்கள் விளக்கேற்றி, பூக்கள் சொரிந்து தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

புகழுடல் ஊர்வலமாக இராணுவ மரியாதையுடன் கோப்பாய் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது. (24)

# ஊனமுற்றோர் சுயதொழில் பயிற்சி நெறி வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் ஊனமுற்றோருக்கான சுயதொழிற் பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளன. ஊனமுற்றோர் தொழில் வாய்ப்பையும் அவர்களது வாழ்க்கை வருமானத்தையும் பெற்று தாங்களே சுயநிர்ணய, சுதந்திர பிரஜையாக வாழும் நோக்குடனேயே மேற்படி பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவர்களுக்கு சுதிரை பின்னல், துவிச்சக்கரவண்டி திருத்துதல், அம்பு வேலை, பனை, வாழைநார் சம்பந்தமான பொருள்கள் உற்பத்தி செய்தல், பிரம்புத் தொழில், தட்டு வேலை ஆகியவற்றுக்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. இதில் பயிற்சி பெற தகுதியானவர்களுக்கு தங்குமிட வசதியும் ஊக்குவிப்புப் பணமும் வழங்கப்படவுள்ளன. பயிற்சி முடிந்ததும் இவர்கள் ஓர் தொழிலில் ஈடுபட்டு வருமானம் பெற வழி வகுக்கப்படும்.

சேர விரும்புவோர் யாழ். ஊனமுற்றோர் சங்கப்பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு அதன் செயலாளர் எஸ். சற்குணலிங்கம் கேட்டுள்ளார்.

எம். பிகளை

எமது மக்கள் இந்தப் போரின் பளுவை பொறுமையுடன் சுமந்து வருகிறார்கள். இப்போரின் பளுவைச் சுமப்பது தான் எமது மக்கள் எமது போராட்டத்திற்கும் எமக்கும் செய்யும் பெரிய பங்களிப்பு என்றார். எம்மைப் பொறுத்த வரையில் எமது மக்களுக்கு நிம்மதியான சுபீட்சமான வாழ்வை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவும் சமாதான சூழலை உருவாக்குவதற்காகவும் நாம் அரசியல் ரீதியாகவும், போராட்ட ரீதியாகவும் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். இதற்காகவே இவ்வருட ஆரம்பத்தில் நாம் ஒருதலைப் பட்சயுத்த நிறுத்தத்தை செய்துவிட்டு பேச்சுவார்த்தைக்கு தயார் என்று அறிவித்தோம்.

## இரு காரணங்கள்

இந்த எமது நடவடிக்கைகளுக்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று எமது மக்கள் படும் துன்ப துயரங்களை நாம் மனதார புரிந்து கொண்டமையும் மற்றையது சிறிலங்கா அரசுடன் பேச்சுவார்த்தைக்குச் சென்று உங்களது நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து உலக சமுதாயம் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வுத் திட்டம் பற்றி பேசுங்கள். அவ்வாறு பேசி உங்களது நியாய பூர்வமான, நாகரிகமான கோரிக்கைகளை சிறிலங்கா அரசு [illegible]

எப்படியாவது யுத்த நிறுத்தம் ஒன்றை செய்ய வேண்டும். பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும். தொண்டமான் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றார், நீங்கள் பாதுகாப்புக் கொடுப்பீர்களா? என்று எம்மைக் கேட்டார்.

அப்பொழுது நாம் அப்பிரதிநிதியிடம் நிச்சயமாக தொண்டமான் யாழ்ப்பாணம் வரலாம். நாம் அவருக்கு பாதுகாப்பு வழங்குவோம். எனவே அவரை வரச் சொல்லுங்கள் என்று கூறினோம். ஆனால் அதற்கு தொண்டமானிடம் இருந்து எந்த பதிலும் கிடைக்கவில்லை. தொடர்ந்து ஆனையிறவு யுத்தம் நிகழ்ந்தது. இந்த யுத்தத்தை புலிகளின் பாரிய இராணுவ வளர்ச்சியாக இன்றைய உலகம் பார்க்கிறதே தவிர ஆனையிறவில் நாம் தோல்வி கண்டு விட்டோம் என்று பார்க்கவில்லை. இதேபோலத்தான் தற்போது மணலாற்றிலும் சிறிலங்கா இராணுவம் முன்னேற முடியாது ஒரு மாதமாக திணறி வருகின்றது.

## மீண்டும் தொண்டமான் முயற்சி

தற்போது மீண்டும் தொண்டமான் சமாதான முயற்சி ஒன்றை மேற்கொண்டு சில யோசனைகளைத் தெரிவித்து தலைவர் பிரபாகரனுக்குக் கடிதம் எழுதியிருந்தார். இதற்கு இலாப [illegible]

## தமிழீழ விடுதலைப்

எங்கள்விடுதலைப்போராட்டம் பல சோகமான பாகங்களை கடந்து வந்தது. உலகின் எந்த விடுதலைப் போராட்டமும் சந்தித்திராத அளவு துரோகங்களை நாம் சந்தித்தோம். அடிக்கடி துரோகங்களை சந்தித்து, அதற்கூடாக வளர்ந்ததுதான் எங்கள் இயக்கமும்-எங்கள் தேசவிடுதலைப் போராட்டமும் ஆகும். அந்த வகையில், எங்களுக்கு மிகப் பெரும் துரோகத்தை இந்திய அரசு செய்தது.

இந்திய அரசு, நண்பனாக-நல்லவராக நடித்துக் கொண்டே, தமிழரை அழிக்க தடம் தேடித் திரிந்தது. ஒரு நிலையில், தனது தேசநலன் என்னும் சுயநல எண்ணத்துக்காக எம்மைப் பலியிட இந்திய அரசு தயாராக நின்றது.

## இந்தியாவின் உண்மை சொரூபம்

உலகத்திற்கு, மிகப்பெரிய ஜனநாயக நாடு என்றும், அகிம்சையை மதிக்கும்- வன்முறையை வெறுக்கும் உன்னதமானவர்கள் என்றும், அமைதியை விரும்பும் பக்கசார்பற்றவர்கள் என்றும், வெளிக்காட்டிக் கொண்டு, உண்மையில் - அதற்கு நேரெதிரான கொள்கையை உடைய இந்திய அரசின் உண்மை வடிவத்தை, உலகத்திற்கு-அதிலும் தமிழீழ மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டிய வரலாற்றுக் கடமையை திலீபன் தொடங்கினான். அந்த வகையில், எங்கள் விடுதலைப் போராட்டத்தில், ஒரு வரலாற்றுப் பாத்திரத்தை திலீபன் வகித்தான்.

இந்திய அரசு, திலீபன் - அவனது அகிம்சைப் போராட்டத்தை சாகடித்த போது உலகம், இந்திய அரசின் உண்மை வடிவத்தை கண்டு கொண்டது. தமிழீழம் புரிந்து கொண்டது.

## புலிகளின் உறுதி

விடுதலைப் புலிகள் தாம் வரித்துக் கொண்ட கொள்கைகளில், எவ்வளவு உறுதியானவர்கள் என்பதற்கு திலீபன் ஒரு உதாரணமானவன். திலீபனின் உண்ணாவிரதப் போராட்டத்தின் இறுதி நாட்களில், ஒரு நாள், இந்தியத் தூதுவர் டிக்சிற் பேச்சுவார்த் [illegible]

வாறு சுற்றிவளைக்கப்பட்ட போது உடனடியாக முடிவெடுத்து - கையிலிருந்த பெட்டியால் தாக்கிவிட்டு ஓடி வரும் போதும், இங்கு நடந்த பல தாக்குதல் களங்களிலும், சாவுக்கு அஞ்சாத- இந்தப் போராட்டத்திற்கு உயிரைத் தர தயாரான திலீபனை கண்டேன்.

உண்ணாவிரத மேடையில், தனது இலட்சியத்திற்காக - தன்னை வருத்தி, தன்னை இழக்கத் தயாரான திலீபனை அவனது, உன்னதமான மனோ பலத்தை நான் சந்தித்தேன்.

## புலிகளின் பலம் ஆயுதத்தில் அல்ல

திலீபனைப் போன்று தான், எங்கள் ஒவ்வொரு போராளியின் இதயத்திற்குள்ளும், ஒரு உன்னதமான - உயர்வான மனோ வலிமை இருக்கின்றது. விடுதலைப் புலிகளின் பலம் என்பது அவர்களின் கைகளில் இருக்கும் ஆயுதங்களால் அல்ல, மனதிலிருக்கும் உறுதியினால் தான் ஏற்பட்டது. இந்த மண்ணை நேசிக்கும்ஒவ்வொரு போராளியும் தனது மரணத்தை ஒவ்வொரு வழியால் தேடிக் கொள்கின்றான். தனது உயிர்த் தியாகத்தால் இந்த மண்ணுக்கு விடுதலை கிடைக்குமாக இருந்தால், தனது சாவு, இந்த விடுதலைப் போராட்டத்தை - உன்னி-முன்தள்ளுமாக இருந்தால், அந்தச் சாவை அணைத்துக் கொள்வதில், எங்கள் போராளிகள் ஒவ்வொருவரும் போட்டி இட்டார்கள். அந்தச் சாவை விரும்பி அணைத்தார்கள்.

திலீபன் தனது மனோ வலிமையை - தன் மண்மீது கொண்ட பற்றுணர்வை, உண்ணா நோன்பிருந்து - தன் உயிர் ஈகத்தால் வெளிப்படுத்தினான்.

இதேநேரம், வெடி மருந்து வண்டியைச் செலுத்திச் சென்று இந்த மண் மீது இருந்த ஆக்கிரமிப்பு சக்திகளை அகற்ற வெடித்து - காற்றுடன் கலக்கிறான் மில்லர். இன்னொரு முறை - இன்னொரு சந்தர்ப்பத்தில், எங்கள் விடுதலைப் போராட்டம் தம்மை வைத்து விலை பேசப்படுவதை அறிந்து, விடுதலைப் போராட்டம் காப் [illegible]

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்த பிரேமதாஸா அதிருப்தியாளர்களும், எதிர்க்கட்சியினரும் இணைந்து கொண்டு வந்த சிறிலங்கா ஜனாதிபதி குற்றவிசாரணை கோரும் மனு உடனடியாக பாராளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படாத நிலையில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது.

சிறிலங்கா ஜனாதிபதி ஒருவரைப் பதவி நீக்கக் கோரும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படுவது மிகவும் சிக்கல் வாய்ந்ததாகும். அரசியல் அமைப்புச் சட்டத்தின் படி ஜனாதிபதி மிகவும் பலமான நிலையிலேயே உள்ளார். பாராளுமன்றத்தில் அவருக்கு எதிரான மூன்றில் இரண்டு பெரும்பான்மையும், நீதிமன்றத் தீர்ப்பும் தேவையாகும்.

இந்நிலையில், சிறிலங்கா ஜனாதிபதிக்கு வேறு ஒரு வழியில் நெருக்கடியை அதிகரிக்கவே நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது. நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று பாராளுமன்றத்தில் கொண்டு வர சாதாரண பெரும்பான்மைப் பலம் ஒன்றே போதுமானதாகும்.

225 ஆசனங்களைக் கொண்ட ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியினரின் கூற்றுப்படி 113 ஆசனங்கள் மட்டுமே உள்ளன. சிறிலங்கா ஜனாதிபதிக்கு ஆதரவாக 116 பாராளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்டிருப்பினும் பின்னர் மூவர் வெளியேறி விட்டனர். அத்துடன் 113 பேரில் சிலர் அதிருப்தியாளர்களின் அணியில் சேரக் கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நிலையில், நம்பிக்கையில்லாப் பிரேரணையை அரசாங்கத்திற்கு எதிராக நிறைவேற்றி விடலாம் என எதிர்க்கட்சிகள் எண்ணுகின்றன.

சிறிலங்கா பாராளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சிகளும், திரு. பிரேமதாஸா அதிருப்தியாளர்களும் பொதுத் தேர்தல் ஒன்றை விரும்பவில்லை. தற்பொழுதுள்ள நிலையிலேயே திரு. பிரேமதாஸாவிற்கு ஆதரவளிக்கும் ஐ. தே. கட்சி அரசாங்கத்தைக் கவிழ்த்து விடலாம் என அவை கருதுகின்றன. அதன் காரணமாகவே பாராளுமன்றக் கலைப்பையும் எதிர்க்கின்றன.

எதிர்க்கட்சிகள் தற்பொழுது கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை வழமையாகக் கொண்டு வரும் நம்பிக்கையில்லாப் பிரேரணை போல் நோக்கக் கூடாது. சிங்கள மக்கள் மத்தியில் கிளர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய புலிகளுக்கு ஆயுதம் வழங்கியமை தொடர்பான விவகாரத்தை வைத்து இப்பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது.

இது சிறிலங்கா ஜனாதிபதியை ஓர் நெருக்கடிக்குள் தள்ளும் என்பது திண்ணம். பாராளுமன்றச் சபாநாயகரிடம் ஜனாதிபதி மீது குற்ற விசாரணை கோரும் மனு இருப்பதனால், சபாநாயகர் அம்மனு செல்லுமா? செல்லாதா? விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுமா? கொள்ளப்படாதா என அறிவிக்கப்படும் வரை ஜனாதிபதியின் அதிகாரங்கள் சில கட்டுப்படுத்தப் பட்ட நிலையிலேயே உள்ளன.

இந்நிலையில் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றி பெறுமானால் ஐ. தே. கட்சி அரசாங்கத்திற்கு மட்டுமல்ல, ஜனாதிபதி பிரேமதாஸாவிற்குக் கூட நெருக்கடி ஏற்படும் என்றே கூறலாம். ஜனாதிபதி பிரேமதாஸா மீதான குற்றவிசாரணை மனு சபாநாயகரிடம் இருப்பதினால் அவரால் பாராளுமன்றத்தை உடன் கலைக்கவும் முடியாது ஆகையினால், நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றி பெறுமானால் எதிர்க்கட்சியினரையே ஆட்சி அமைக்க ஜனாதிபதி பிரேமதாஸா அழைக்க வேண்டி வரும். அது திரு. பிரேமதாஸாவின் நிர்வாகத்திற்குப் பெரும் இடைஞ்சல்கள் நிறைந்ததாகவே இருக்கும். ஜனாதிபதி தனது விருப்பத்திற்கு ஏற்ப செயற்படமுடியாது போய்விடும்.

இந்நிலையினை நோக்கும் போது பிரேமதாஸா எதிரணியினர் நன்கு திட்டமிட்டுச் செயலாற்றுவது போல் தெரிகின்றது. அவர்களின் குறிக்கோள் பிரேமதாஸாவைப் பதவியில் இருந்து இறக்குவது ஒன்றே ஆனால், இந்த எதிரணியில் எதிர்க்கட்சிகள், அதிருப்தியாளர்கள் மட்டுந்தானா? சபாநாயகரின் பங்கு என்ன?

## எம். பிகளை

எமது மக்கள் இந்தப் போரின் பளுவை பொறுமையுடன் சுமந்து வருகிறார்கள். இப் போரின் பளுவைச் சுமப்பது தான் எமது மக்கள் எமது போராட்டத்திற்கும் எமக்கும் செய்யும் பெரிய பங்களிப்பு என்றார். எம்மைப் பொறுத்த வரையில் எமது மக்களுக்கு நிம்மதியான சுபீட்சமான வாழ்வை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவும் சமாதான சூழலை உருவாக்குவதற்காகவும் நாம் அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். இதற்காகவே இவ்வருட ஆரம்பத்தில் நாம் ஒருதலைப் பட்ச யுத்த நிறுத்தத்தை செய்துவிட்டு பேச்சுவார்த்தைக்கு தயார் என்று அறிவித்தோம்.

## இரு காரணங்கள்

இந்த எமது நடவடிக்கைகளுக்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று எமது மக்கள் படும் துன்ப துயரங்களை நாம் மனதார புரிந்து கொண்டமையும் மற்றையது சிறிலங்கா அரசுடன் பேச்சுவார்த்தைக்குச் சென்று உங்களது நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து உலக சமுதாயம் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வுத் திட்டம் பற்றி பேசுங்கள். அவ்வாறு பேசி உங்களது நியாய பூர்வமான, நாகரிகமான கோரிக்கைகளை சிறிலங்கா அரசு நிராகரிக்கும் பட்சத்தில் நாம் சிறிலங்கா மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கவும் உங்களது போராட்டத்தை ஆதரிக்கவும் தயாராக இருப்பதாக பல சர்வதேச நாடுகள் எம்மிடம் நேரடியாகக் கூறியிருந்தன. இந்த இரு காரணங்களுக்காகவும் நாம் மேற்கொண்ட சமாதான முயற்சியை சிறிலங்கா அரசு தவறாக எடைபோட்டது. இதனால் எமது முயற்சியை சிறிலங்கா அரசு நிராகரித்து போரைத் தொடர்ந்தது. இந்த யுத்தத்தில் நாம் சிறிலங்கா இராணுவத்திற்கு பாரிய சேதங்களை ஏற்படுத்தி நாம் யுத்த திறனில் வளம் பெற்று இராணுவ ரீதியாக வளர்ந்து வருகின்றோம் என்பதை சிறிலங்கா அரசுக்கு உணர்த்தினோம்.

## பேச்சிற்கான சமிக்ஞைகள்

இதனைத் தொடர்ந்து சமாதான முயற்சிகளுக்கான சமிக்ஞைகள் பல முனைகளிலிருந்தும் எமக்கு அனுப்பப்பட்டன. இவற்றில் ஒன்றாக சிறிலங்காவின் மூத்த அமைச்சர் திரு. தொண்டமான் தனது பிரதிநிதி ஒருவரை மூன்று மாதங்களுக்கு முன் எம்மிடம் அனுப்பி எப்படியாவது யுத்த நிறுத்தம் ஒன்றை செய்ய வேண்டும், பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும். தொண்டமான் யாழ்ப்பாணம் வரவிரும்புகின்றார், நீங்கள் பாதுகாப்புக் கொடுப்பீர்களா? என்று எம்மைக் கேட்டார்.

அப்பொழுது நாம் அப்பிரதிநிதியிடம் நிச்சயமாக தொண்டமான் யாழ்ப்பாணம் வரலாம். நாம் அவருக்கு பாதுகாப்பு வழங்குவோம். எனவே அவரை வரச் சொல்லுங்கள் என்று கூறினோம். ஆனால் அதற்கு தொண்டமானிடம் இருந்து எந்த பதிலும் கிடைக்கவில்லை. தொடர்ந்து ஆனையிறவு யுத்தம் நிகழ்ந்தது. இந்த யுத்தத்தை புலிகளின் பாரிய இராணுவ வளர்ச்சியாக இன்றைய உலகம் பார்க்கிறதே தவிர ஆனையிறவில் நாம் தோல்வி கண்டு விட்டோம் என்று பார்க்கவில்லை. இதேபோலத்தான் தற்போது மணலாற்றிலும் சிறிலங்கா இராணுவம் முன்னேற முடியாது ஒரு மாதமாக திணறி வருகின்றது.

## மீண்டும் தொண்டமான் முயற்சி

தற்போது மீண்டும் தொண்டமான் சமாதான முயற்சி ஒன்றை மேற்கொண்டு சில யோசனைகளைத் தெரிவித்து தலைவர் பிரபாகரனுக்கு கடிதம் எழுதியிருந்தார். இதற்குப் பதிலாக பிரதித் தலைவர் திரு. மாத்தயா கடிதம் ஒன்றின் மூலம் நேரடியாக பேச்சுக்குவரும்படி அழைப்பு விடுத்துள்ளார்.

## முக்கிய முரண்பாடு

இந்த நிலையில் எமது பிரச்சினை தொடர்பாக எமக்கும் சிறிலங்கா அரசுக்கும் முக்கிய முரண்பாடு என்னவென்றால் சிறிலங்கா அரசு எமது பிரச்சினையை ஒரு தேசியப் பிரச்சனையாகப் பார்க்கவில்லை. இப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் தமிழர்களுக்கு அற்ப சொற்ப சலுகைகளை வழங்கினால் போதும் பிரச்சனை தீர்ந்துவிடும் என்று கடந்த நாற்பது ஆண்டுகளாக இருந்துவரும் நிலையில் இருந்து மாறவில்லை. ஆனால் நாம் இது ஓர் தேசியப் பிரச்சினை, தமிழ் மக்கள் தேசிய இனம், எமக்கு தாயக பூமி இருக்கின்றது, தன்னாட்சியுரிமை இருக்கின்றது இந்த அடிப்படையில் தான் பேச்சுக்கள் நடாத்தப்பட வேண்டும் என்றும் இவற்றை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் நாம் வலியுறுத்தி வருகின்றோம். இது தான் எமக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையிலான பெரிய இடைவெளி.

(4ஆம் பக்கம் பார்க்க)

அரசு தயாராக நின்றது.

## இந்தியாவின் உண்மை சொரூபம்

உலகத்திற்கு, மிகப்பெரிய ஜனநாயக நாடு என்றும், அகிம்சையை மதிக்கும் - வன்முறையை வெறுக்கும் உன்னதமானவர்கள் என்றும், அமைதியை விரும்பும் பக்கசார்பற்றவர்கள் என்றும், வெளிக்காட்டிக் கொண்டு, உண்மையில் - அதற்கு நேரெதிரான கொள்கையை உடைய இந்திய அரசின் உண்மை வடிவத்தை, உலகத்திற்கு - அதிலும் தமிழீழ மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டிய வரலாற்றுக் கடமையை திலீபன் தொடங்கினான். அந்த வகையில், எங்கள் விடுதலைப் போராட்டத்தில், ஒரு வரலாற்றுப் பாத்திரத்தை திலீபன் வகித்தான்.

இந்திய அரசு, திலீபன் - அவனது அகிம்சைப் போராட்டத்தை சாகடித்த போது உலகம், இந்திய அரசின் உண்மை வடிவத்தை கண்டு கொண்டது. தமிழீழம் புரிந்து கொண்டது.

## புலிகளின் உறுதி

விடுதலைப் புலிகள் தாம் வரித்துக் கொண்ட கொள்கைகளில், எவ்வளவு உறுதியானவர்கள் என்பதற்கு திலீபன் ஒரு உதாரணமானவன். திலீபனின் உண்ணாவிரதப் போராட்டத்தின் இறுதி நாட்களில், ஒரு நாள், இந்தியத் தூதுவர் டிக்சிற் பேச்சுவார்த்தை என்று சொல்லிக்கொண்டு தமிழீழத்திற்கு வந்து விட்டுச் சென்றார்.

அன்று, திலீபனிடம் டிக்சிற் வந்ததையும், அர்த்தமற்ற வாய்வழி உறுதிகளை தந்து விட்டுப் போனதையும் தெரியப்படுத்தினோம். அந்த நேரம் திலீபன் என்னைப் பற்றி யோசிக்க வேண்டாம், எந்த நிலையிலும் எங்களது இலட்சியத்தை விட்டுக் கொடுக்க வேண்டாம் என்று உறுதியுடன் கூறினான். தனது வாழ்வின் கடுமையான-இறுதியான நேரங்களிலும் வியக்க வைக்கும் மனோபலத்துடன் - ஆன்மீக பலத்துடன் திலீபன் தனது போராட்டத்தைத் தொடர்ந்தான்.

## திலீபனின் ஆன்மீக பலம்

திலீபனின் உயர்ந்த மன உறுதியை - ஆன்மீக பலத்தை நான் பலமுறை கண்டிருக்கின்றேன். தனக்கு மருத்துவக் படிப்பிற்கு சந்தர்ப்பம் கிடைத்தபோதும், விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்ட போது, திலீபனின் தெளிவை நான் முதலில் கண்டேன்.

அதன் பின்பு, இராணுவத்தினரால் அசைய முடியாத

ஒரு உன்னதமான - உயர்வான மனோ வலிமை இருக்கின்றது. விடுதலைப் புலிகளின் பலம் என்பது அவர்களின் கைகளில் இருக்கும் ஆயுதங்களால் அல்ல, மனதிலிருக்கும் உறுதியினால் தான் ஏற்பட்டது. இந்த மண்ணை நேசிக்கும் ஒவ்வொரு போராளியும் தனது மரணத்தை ஒவ்வொரு வழியால் தேடிக்கொள்கின்றான். தனது உயிர்த் தியாகத்தால் இந்த மண்ணுக்கு விடுதலை கிடைக்குமாக இருந்தால், தனது சாவு, இந்த விடுதலைப் போராட்டத்தை - உந்தி-முன்தள்ளுமாக இருந்தால், அந்தச் சாவை அணைத்துக் கொள்வதில், எங்கள் போராளிகள் ஒவ்வொருவரும் போட்டி இட்டார்கள். அந்தச் சாவை விரும்பி அணைத்தார்கள்.

திலீபன் தனது மனோ வலிமையை - தன் மண்மீது கொண்ட பற்றுணர்வை, உண்ணா நோன்பிருந்து - தன் உயிர் ஈகத்தால் வெளிப்படுத்தினான்.

இதேநேரம், வெடி மருந்து வண்டியைச் செலுத்திச் சென்று இந்த மண் மீது இருந்த ஆக்கிரமிப்பு சக்திகளை அகற்ற வெடித்து - காற்றுடன் கலக்கிறான் மில்லர். இன்னொரு முறை - இன்னொரு சந்தர்ப்பத்தில், எங்கள் விடுதலைப் போராட்டம் தம்மை வைத்து விலை பேசப்படுவதை அறிந்து, விடுதலைப் போராட்டம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக வீரமரணத்தைச் சந்திக்கிறார்கள். புலேந்திரன், குமரப்பாவுடன் மேலும் பத்துப் பேர்.

## உயிர்த்தியாகத்தால் வளர்ந்த போராட்டம்

இப்படிப்பட்ட ஆயிரக்கணக்கான உயர்ந்த உயிர்த் தியாகங்களால்தான் எமது விடுதலைப் போராட்டம் வளர்ந்துள்ளது. இன்றைய உயர்ந்த நிலையை அடைந்துள்ளது.

இன்று, இங்கு கூடி நிற்கும் மக்களைப் பார்க்கும் போது, எனக்கு ஒரு நினைவு வருகின்றது. திலீபனின் உண்ணாவிரத போராட்ட காலத்தில் அவன் முன் ஆயிரக்கணக்கான மக்கள் அணிதிரண்டார்கள். மக்களின் உணர்வைப் பார்த்து மகிழ்ச்சியடைந்த திலீபன், இந்தமக்களுக்காக இன்னொருதரம் பிறந்து, இந்த மக்களுக்காக இன்னொருதரம்- சாவைச் சந்திக்க விரும்புகிறேன் எனக் குறிப்பிட்டான்.

இன்று, அவனின் நினைவு நாளில் இங்கு கூடி நிற்கும், உங்களைப் பார்த்து, அவன் நேசித்த தாயகம் நிச்சயம் மகிழ்ச்சியடையும்.

( 4ஆம் பக்கம் பார்க்க)

# ஐ. நா. ஆயுதப் பரிசோதகர்கள் தொடர்ந்தும் தடுத்து வைப்பு

## மிகப்பெரும் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

ஐ. நா. சபையின் நாற்பத்தி நான்கு ஆயுதப் பரிசோதகர்களையும் தொடர்ந்து மூன்றாவது நாளாக நேற்றும் ஈராக் தடுத்து வைத்துள்ளது. அவர்கள் தங்க வைக்கப்பட்டிருக்கும் வளாகத்திற்கு எதிரே வளைகுடா யுத்தத்தின் பின்னான மிகப் பெரிய அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது. இதில் பல்லாயிரக் கணக்கான ஈராக்கியர் பங்கேற்றனர்.

ஈராக்கின் இரகசிய அணுவாயுத உற்பத்திகள் பற்றிய தகவல்கள் அடங்கிய பத்திரங்கள் பரிசோதகர் குழுவினரால் கைப்பற்றப்பட்டன. இதனால் சர்ச்சை ஏற்பட்டது. எனினும் இந்தச் சர்ச்சை தொடர்ந்து வருவதாக வெளிவரும் தகவல்கள் பற்றி தமக்கு எதுவித தகவலும் இல்லையென ஐ. நா. அதிகாரிகள் கூறினர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கைகளை உயர்த்தி ஜனாதிபதி சதாம் ஹுசைனுக்கு வாழ்த்து தெரிவித்தனர். தீய சக்திகளே ஒழிக என்று எழுதப்பட்ட பதாகைகளையும் அவர்கள் தாங்கியிருந்தனர்.

அமெரிக்கரான டேவிட்கே ஈராக்கின் கேந்திர நிலையங்களை பரிசோதித்த முறையையும் பக்தாத் மக்கள் வன்மையாகக் கண்டித்தனர். ஈராக்கின் பிரதிப் பிரதமர் தாரிக் அஸீஸ் கருத்துத் தெரிவிக்கும் போது டேவிட் கே சி. ஐ. ஏ. ஸ்தாபனத்தை சேர்ந்தவர் எனத் தகவல் கிடைத்திருப்பதாக குறிப்பிட்டார். இவர்தான் கடந்த ஜூன் மாதக் குழப்பங்களுக்குக் காரணமானவர் என்றும், அந்த மனிதர் ஒவ்வொரு தடவை பக்தாத் வந்தபோதும் பிரச்சினைகள் தோன்றியிருக்கின்றன என்றும் இவை அவரால் உருவாக்கப்பட்டவை எனவும் தெரிவித்தார். அவரே பெரிது படுத்திக் கூறிய ஒரு பிரச்சினையும் ஆகும் எனவும் தாரிக் அஸீஸ் குறிப்பிட்டார்.

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தலைவரும், பிரான்சு தூதுவருமான ஜேம்ஸ் பெர்னட் மேர்னி கருத்து தெரிவிக்கும் போது விசேட ஆணைக்குழுவிற்கும், தற்போது ஈராக்கில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பரிசோதனைக் குழுவிற்கும், பாதுகாப்பு சபை முழு ஆதரவு வழங்கும் எனக் கூறினார். அந்தக் குழு சம்பந்தப்பட்ட தீர்மானங்களிற் குறிப்பிட்டபடியே மிகவும் கரிசனையோடு நிறைவேற்றி வருவதாகவும், அவர் கூறினார்.

ஈராக் வெளிநாட்டமைச்சர் அகமட் ஹுசைன் கருத்து வெளியிடும் போது, இந்த நடவடிக்கை ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானப்படியோ, விசேட ஆணைக்குழுவின் தீர்மானப்படியோ நியாயமானது அல்ல எனக் குறிப்பிட்டார். இந்த அணுகுமுறையை தாம் எதிர்ப்பதாகவும், இதனை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் தெரிவித்தார்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

### எம். பி.களை

இந்த நிலையில் நாம் சிறிலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்தும்போது அரசியல் தீர்வு பற்றி பின்னர் பேசலாம். முதற்கட்டமாக எமது மக்கள் மீது அநியாயமாக திணிக்கப்பட்ட பொருளாதாரத்தடை நீக்கப்படவேண்டும், குடியேற்றத் திட்டங்கள் நிறுத்தப்படவேண்டும், எமது மக்கள் சுமந்து வரும் பொருளாதார, பளுவை நீக்க வேண்டும் அரசு உண்மையாக தமிழ் மக்களுக்கு நீதி வழங்க வேண்டும் என்றால் நல்லெண்ண முயற்சியாக இந்த தடைகளை நீக்கி இங்கு ஒரு சகஜநிலை ஏற்படுவதற்கு வழி வகுக்க வேண்டும் அதன்பின்னர் ஏனைய விடயங்கள் பற்றிப் பேசலாம் என்று நாம் கருதுகிறோம்.

### தீர்விற்கான வழி

எமக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையில் இருக்கும் முரண்பாடுகளுக்கு ஒரு தீர்வாக எமது தாயகத்தை அங்கீகரித்து பூரண சுயாட்சி உடைய ஒரு சமஷ்டி அமைப்பை எமக்குத் தாருங்கள் என நாம் பரிசீலிக்கத்தயா... விடயம் பற்றி நாம் இதுவரை தீர்க்கமான முடிவு எதனையும் எடுக்கவில்லை. இதுபற்றி பரிசீலனை செய்து வருகின்றோம்.

### தொண்டமான் பேசமுயற்சி

தற்போதைய நிலையில் தொண்டமான் பேச்சுவார்த்தை பற்றி கூறி வருகின்றார். உலக நாடுகளின் சமாதானத்திற்கு போகும்படி எம்மை வற்புறுத்திக் கொண்டிருக்கின்றன. ஆனால் சிறிலங்கா இராணுவத்தினர் யுத்தத்தைத் தொடர்ந்து தீவிரமாக நடத்தி வருகின்றனர். மணலாற்றில் வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதற்காக இந்த யுத்தம் நடைபெறுகிறது.

இவ்வாறு இராணுவத் தாக்குதலை நடாத்தி இராணுவ வல்லாதிக்க நிலையில் இருந்து எம்முடன் பேசுவதற்கு அரசு முன்வருமாயின் நாம் அரசுடன் பேசத் தயாரில்லை.

### கொள்கை மாறாது

எமது மக்களின் நலனுக்காக, நல்வாழ்வுக்காக, நிம்மதிக்காக, நாம் சில வழி...

# தியாகி திலீபன் தடகள போட்டிகள் நாளை ஆரம்பம்

நல்லூரிலிருந்து தியாகதீபம் எடுத்துவரப்பட்டு மத்திய கல்லூரி மைதானத்தில் ஏற்றும் நிகழ்வுடன் மாவட்ட மட்டத்திலான தியாகி திலீபன் நினைவு தடகள விழா நாளை ஆரம்பமாகிறது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினால் நடாத்தப்படும் மேற்படி விழா நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நாளை காலை 7.30மணிக்கு தியாகி திலீபன் உண்ணாவிரதமிருந்த இடத்திலிருந்து எடுத்துவரப்படும் தியாகதீபம் மைதானத்தில் ஏற்றப்படும். அதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் அணிவகுப்பும் மறுநாள் போட்டிகள் முடிவடைந்ததும் துவிச்சக்கரவண்டி ஓட்டம் மரதன் ஓட்டம் ஆகியவற்றுக்கான பரிசளிப்புகளும் நடைபெறும்.

### சிறிலங்காவிடம்

வெளியுறவுத்துறை இணை அமைச்சர் தெரிவித்தார்.

பெங்களூரில் நேற்று முன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய இணை அமைச்சர் இதனைத் தெரிவித்தார். ஆனால் ராஜீவ் கொலைவழக்கில் சிறிலங்கா அரசு பயனுள்ள பல தகவல்களைத் தந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

### ஆயிரக்கணக்கான

நிகழ்ச்சி நிறைவடைந்ததைத் தொடர்ந்து நினைவுக் கூட்டம் ஆரம்பமாகியது.

யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மாறன் தலைமையில் நடந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில் மக்களுறவுகொள்கை முன்னெடுப்புப் பிரிவு பொறுப்பாளர் பரா, மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் ஜெயா, விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட விசேட தளபதி தமிழ்ச்செல்வன், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர் பாலகுமாரன் ஆகியோர் உட்பட விடு...

### இராணுவத்தினரின்

களில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதனாலேயே அநுராதபுரத்தில் மேலதிக வார்ட்டுகள் இராணுவ வீரர்களுக்காக ஒதுக்கப்படுவதாக கொழும்பின் பத்திரிகைச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

### வீரவணக்கம்

மருது (தேவராசா சிவகுமார் யோகபுரம், உரும்பராய்) வீரமரணமடைந்தார். இவருக்கு புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

### மூதூரில்

னுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இத் தாக்குதலின் போது இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவரவில்லை.

# மாவீரர்களுக்கு மக்கள் கோண்டாவிலில் அஞ்சலி

(கோண்டாவில்)

நேற்று (26-9-91) வியாழக்கிழமை காலை 9மணிதொடக்கம் நண்பகல் 2.00மணிவரை கோண்டாவில் இந்து மகாவித்தியாலய மண்டபத்தில் மணலாறு மாவட்டத்தில் 24-9-91 அன்று நடைபெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கைகளான வரதப்பா (தங்கவேலாயுதம் விஜயகரன் - மயிலிட்டி) அற்புதம் (கணபதிப்பிள்ளை மகேந்திரன் - தம்பலகாமம்) மகிழன் (இராமலிங்கம் பொன்குமார் - கொழும்புத்துறை அரியாலை) சின்னமருது (தேவராசா சிவகுமார் உரும்பராய்) ஆகியோரது புகழுடல்கள் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

செங்கம்பளம் விரிக்கப்பட்ட மேடையில் வைக்கப்பட்டிருந்த இவ்வேங்கைகளுக்கு ஆயிரக் கணக்கான பொதுமக்கள் நீண்ட வரிசையில் நின்று கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

விடுதலைப் புலிகளின் மக்கள் உறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவைச் சேர்ந்த பரா மற்றும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அமைப்பைச் சேர்ந்தோரின் அஞ்சலி உரையோடு 'பாண்ட்' வாத்தியம் முழங்க புகழுடல்கள் கோப்பாய் மாவீரர் மயானத்திற்கு தகனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. (56)

### கப்டன்

ணியின் பிரதித் தலைவர் கரிகாலன் அவர்கள் மங்கல விளக்கேற்றி வைக்க விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் மகேந்திரராசா கப்டன் அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பை திறந்து வைத்தார் எழுச்சிக் கிராமத்தின் முன்றலில் கப்டன் அக்காச்சியின் திருவுருவப் படத்தை யாழ் மாவட்டத் தளபதி செந்தாளன் (திலீப்) திரை நீக்கம் செய்து வைத்தார்.

மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட எழுச்சிக் குடியிருப்பின் கப்டன் ரஞ்சன் பாலர் பாடசாலையை திருமலை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ரூபன் திறந்து வைத்தார் கிராமத்தின் மத்தியில் அமைந்திருக்கும் சிறுவர் பூங்காவை கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் பரா திறந்து வைத்தார். நிதிப்பொறுப்பாளர் ரவி கப்டன் ஜெனி படிப்பகத்தையும், கப்டன் லோலோ முதலுதவி நிலையத்தை யாழ். நிர்வாக உதவி அரசியல் பொறுப்பாளர் எழில்ரசன் (பாப்பா) திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து உதவும் கரங்கள் மக்கள் அமைப்பின் நிர்வாகப் பொறுப்பாளர் கண்ணன் திறந்து வைத்ததை அடுத்து தமிழீழ அரசியல் பொறுப்பாளர் மூர்த்தி அவர்களால் ஊரக பணிமனை திறந்து வைக்கப்பட்டது. இறுதியாக ஆய்வு நிறுவன உற்பத்திப் பகுதியை யாழ். மாவட்ட விசேட தளபதி தமிழ்ச்செல்வன் (தினேஸ்) திறந்து வைத்தார்.

மேஜர் கபாஸ் விளையாட்டுத் திடலில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் ஆயிரக் கணக்கான மக்கள் முன்னிலை...

# மட்டக்களப்பில் கிளைமோர் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலுள்ள கிரான் பகுதியிலிருந்து புலிபாய்ந்தகல் நோக்கிச் சென்று கொண்டிருந்த சிறிலங்கா இராணுவ வாகனத்தின் மீது நேற்றுக் காலை கிளைமோர் கண்ணி வெடித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இத்தாக்குதலினால் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவரவில்லை.

### வழிபாட்டிற்கு

அவர் ... தொடர்ந்து உரை நிகழ்த்து... போது எமது நீண்ட அரசியல் வரலாற்றில் பல்வேறு எதிர்ப்புக்களையும், துரோகத்தனங்களையும் சந்தித்திருக்கின்றோம். இந்திய அரசு எமக்கு இழைத்த துரோகத்தை திலீபனின் போராட்டம் உலகிற்கு அம்பலப்படுத்தியதோடு எமது மக்கள் தமது உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கு தமது சொந்தக் காலில் நின்று போராட வேண்டும் என்பதையும் அன்னிய சக்திகள் எமது உரிமைகளை ஒருபொழுதும் பெற்றுத்தரப்போவதில்லை என்பதையும் திலீபனின் போராட்டம் உணர்த்தியது என்று தெரிவித்தார்.

...யில் மாலை 7.50 ...பாடசாலை ... உட்... திறப்பு விழா ஆரம்பமானது. தொடர்ந்து யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மாறன் தலைமையுரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவரின் உரை இடம் பெற்றது.

அடுத்து அங்கு அமைக்கப்பட்ட முப்பது வீடுகளின் திறப்புகளையும் உரியவர்களிடம் திரு. மகேந்திரராசா, திரு. திலீப், திரு. தினேஸ், திரு. கரிகாலன், திரு. ரூபன், செல்வி ஜெயா, திரு. பரா, திரு. பாப்பா ஆகியோர் வழங்கினர்.

திறப்பு வழங்கிய நிகழ்ச்சியைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் பலர் உரையாற்றினர்.

இறுதியாக வில்லிசை, நாடகம், சாந்தனின் இசை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெற்றன. நள்ளிரவு பன்னிரெண்டு மணியுடன் எழுச்சிக் குடியிருப்புத் திறப்பு விழா நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன. (ச)

The College of Higher Studies

ஆர்ப்பாட்டக்காரர்கள் கை களை உயர்த்தி ஜனாதிபதி சதாம் ஹுசைனுக்கு வாழ்த்து தெரிவித்தனர். தீய சக்தி களே ஒழிக என்று எழுதப் பட்ட பதாகைகளையும் அவர் கள் தாங்கியிருந்தனர.

அமெரிக்கரான டேவிட்கே ஈராக்கின் கேந்திர நிலையங் களை பரிசோதித்த முறை

(8ம் பக்கத் தொடர்ச்சி)

## எம். பி.களை

இந்த நிலையில் நாம் சிறி லங்கா அரசுடன் பேச்சுவார் த்தை நடாத்தும்போது அரசி யல் தீர்வு பற்றி பின்னர் பேச லாம். முதற்கட்டமாக எமது மக்கள் மீது அநியாயமாக திணிக்கப்பட்ட பொருளாதா ரத்தடை நீக்கப்படவேண்டும், குடியேற்றத் திட்டங்கள் நிறுத் தப்படவேண்டும், எமது மக் கள் சுமந்து வரும் பொருளா தார, பளுவை நீக்க வேண்டும் அரசு உண்மையாக தமிழ் மக் களுக்கு நீதி வழங்க வேண்டும் என்றால் நல்லெண்ண முயற்சி யாக இந்த தடைகளை நீக்கி இங்கு ஒரு சகஜநிலை ஏற்படு வதற்கு வழி வகுக்க வேண்டும் அதன்பின்னர் ஏனையவிடயங் கள் பற்றிப் பேசலாம் என்று நாம் கருதுகின்றோம்.

## தீர்விற்கான வழி

எமக்கும் சிறிலங்கா அரசுக் கும் இடையில் இருக்கும் முரண்பாடுகளுக்கு ஒரு தீர் வாக எமது தாயகத்தை அங்கீகரித்து பூரண சுயாட்சி உடைய ஒரு சமஷ்டி அமை ப்பை எமக்குத் தருங்கள் அதை நாம் பரிசீலிக்கத்தயா ராக இருக்கின்றோம் என்று நாம் கூறியிருக்கின்றோம். இந்த எமது கருத்தை மேற் குலக நாடுகள் அங்கீகரிக்கத் தொடங்கி விட்டன.

தற்பொழுது சிறிலங்காவில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடி ஒரு பதவிப் போட் டியால் எழுந்த ஒரு கொந் தளிப்பு நிலை. இது எமது மக்களுக்கு எந்தவித நன்மை யையும் கொடுக்கப்போவ தில்லை. ஆனால் இந்த நிலை யில் நாமும் சில முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

எமக்கு சில வாய்ப்புக்கள் உண்டு. உதாரணமாக யாழ். மாவட்டத்தில் தெரிவு செய் யப்பட்ட கவேட்சை எம். பி. கள் பாராளுமன்றம் சென் றால் சில காரியங்களைச் செய்யலாம் என்று நாம் சிந் திக்கின்றோம். அதாவது தற் பொழுது நடைபெறும் யுத் தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்தி தமிழ் மக்கள்மீது இருக்கும் பொருளாதாரத் தடைகளை நீக்குவதாயிருந் தால் நாம் இந்த சுயேச்சை எம். பிகளைமீண்டும் பாராளு மன்றம் அனுப்பலாம் இவ் விடயம் பற்றி நாம் இதுவரை தீர்க்கமான முடிவு எதனை யும் எடுக்கவில்லை. இதுபற்றி பரிசிலனை செய்துவருகின் றோம்.

## தொண்டமான் பேசமுயற்சி

தற்போதைய நிலையில் தொண்டமான் பேச்சு வார்த்தை பற்றி கூறி வரு கின்றார். உலக நாடுகள் சமாதானத்திற்கு போகும்படி எம்மை வற்புறுத்திக் கொண் டிருக்கின்றன. ஆனால் சிறி லங்கா இராணுவத்தினர் யுத்தத்தைத் தொடர்ந்து தீவிரமாக நடத்தி வருகின் றனர். மணலாற்றில் வடக்கை யும் கிழக்கையும் பிரிப்பதற் காக இந்த யுத்தம் நடை பெறுகிறது,

இவ்வாறு இராணுவத் தாக் குதல்களை நடாத்தி இரா ணுவ வல்லாதிக்க நிலையில் இருந்து எம்முடன் பேசுவ தற்கு அரசு முன்வருமாயின் நாம் அரசுடன் பேசத் தயா ரில்லை.

## கொள்கை மாறாது

எமது மக்களின் நலனுக் காக, நல்வாழ்வுக்காக, நிம் மதிக்காக, நாம் சில வழி முறைகளைக் கையாள்வோம். ஆனால் விடுதலைப் புலிகள் கொண்ட கொள்கையில் உறு தியானவர்கள், நாம் எந்த இலட்சியத்திற்காக போராடு கின்றோமோ அந்த இலட்சி யத்தை நிச்சயமாக அடை வோம். இதற்காக நாம் எத் தகைய வழிமுறைகளையும் கையாள்வோம். ஆனால் எமது போராட்ட இலட்சியத் தில் இருந்து மாற மாட் டோம் என்று உறுதியாகக் கூறுகின்றோம். நாம் கையா ளும் வழிமுறைகள் எதுவாக இருந்தாலும் எமது மக்களின் நலனுக்காகவே இருக்கும் என் றும் நிச்சயமாக எந்த சந்தர் ப்பவாதத்திற்காகவும் அல்ல என்பதை உறுதியாகக் கூறு கின்றோம்.

சத்தியம் யார் பக்கம் இருக் கின்றதோ அவர்கள் பக்கமே வரலாறும் இருக்கும். எமது பக்கம் சத்தியமும், நீதியும், தர்மமும் இருக்கின்றது. எனவே எமது பக்கமே வர லாறும் இருக்கின்றது எனவே நாம் நிச்சயம் வெற்றி அடை வோம் என்று இறுதியாகக் கூறி தனது பேச்சை முடித் துக் கொண்டார். (அ)

றும் நிகழ்வுடன் மாவட்ட மட்டத்திலான தியாகி திலீ பன் நினைவு தடகள விழா நாளை ஆரம்பமாகிறது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினால் நடாத்தப் படும் மேற்படி விழா நாளை சனிக்கிழமையும் நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமையும் யாழ். மத்திய கல்லூரி மைதா

விரதமிருந்த இடத்திலிருந்து எடுத்துவரப்படும் தியாகதீபம் மைதானத்தில் ஏற்றப்படும். அதனைத் தொடர்ந்து பாட சாலை மாணவர்களின் அணி வகுப்பும் மறுநாள் போட்டி கள் முடிவடைந்ததும் துவிச் சக்கரவண்டி ஓட்டம் மரதன் ஓட்டம் ஆகியவற்றுக்கான பரிசளிப்புகளும் நடைபெறும்.

## சிறிலங்காவிடம்

வெளியுறவுத்துறை இணை அமைச்சர் தெரிவித்தார்.

பெங்களூரில் நேற்று முன் தினம் செய்தியாளர்கள் மத் தியில் பேசிய இணை அமைச் சர் இதனைத் தெரிவித்தார். ஆனால் ராஜீவ் கொலைவழக் கில் சிறிலங்கா அரசு பய னுள்ள பல தகவல்களைத் தந் துள்ளது என்றும் அவர் தெரி வித்தார்.

## ஆயிரக்கணக்கான

நிகழ்ச்சி நிறைவடைந்ததைத் தொடர்ந்து நினைவுக் கூட் டம் ஆரம்பமாகியது.

யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மாறன் தலைமையில் நடந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில் மக்களுறவுகொள் கை முன்னெடுப்புப் பிரிவு பொறுப்பாளர் பரா, மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் ஜெயா, விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட விசேட தள பதி தமிழ்ச்செல்வன், விடு தலைப் புலிகள் மக்கள் முன் னணிப் பிரமுகர் பாலகுமா ரன் ஆகியோர் உட்பட விடு தலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி. அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலி கள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திர ராசா ஆகியோர் உரையாற் றினர்.

ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்ட இக் கூட் டத்தைத் தொடர்ந்து விசேட கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

3 ஆம் பக்கம் தொடர்ச்சி

## தமிழீழ

இறுதியாக நான் திலீபன் அடிக்கடி சொல்லும் வார்த் தைகளை நினைவுபடுத்து கிறேன். மக்களுக்காக புலி கள் - மக்களுடன் புலிகள்-மக் களே புலிகள் திலீபனின் இந் தச் சிந்தனை வடிவத்தை அவ னின் மனதின் விருப்பத்தை நாம் புரிந்துகொண்டு, செயற் படுத்தவேண்டும், செயற்பட வேண்டும்.

மக்கள் எல்லாம் போராடும் சக்தியாக மாறும். உன்னத மான சமுதாயத்தை நாம் வடிவமைக்கவேண்டும். பலம் பெற்றதொரு படையணியை உருவாக்கி, எம் தேசத்தை மீட்டெடுக்க வேண்டும் - பாது காத்து கட்டி, வளர்க்க வேண் டும் இதுவே எங்கள் தேசத் தின் தேவையாகும்.

## இராணுவத்தினரின்

களில் இடநெருக்கடி ஏற்பட் டுள்ளதனாலேயே அநுராத புரத்தில் மேலதிகவார்ட்டுகள் இராணுவ வீரர்களுக்காக ஒதுக்கப்படுவதாக கொழும் பில் பத்திரிகைச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

## வீரவணக்கம்

மருது (தேவராசா சிவ குமார் யோகபுரம், உரும்ப ராய்) வீரமரணமடைந்தார். இவருக்கு புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

## முதூரில்

ணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியுள் ளனர். இத் தாக்குதலின் போது இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவரவில்லை.

பதி செந்தாளன் (திலீப்) திரை நீக்கம் செய்து வைத்தார்.

மின் விளக்குகளால் அலங் கரிக்கப்பட்ட எழுச்சிக் குடி யிருப்பின் கப்டன் ரங்கன் பாலர் பாடசாலையை திரு மலை மாவட்ட அரசியல் நிர் வாகப் பொறுப்பாளர் ரூபன் திறந்து வைத்தார் கிராமத் தின் மத்தியில் அமைந்திருந்த சிறுவர் பூங்காவை கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பா ளர் பரா திறந்து வைத்தார். நிதிப்பொறுப்பாளர் ரவி கப் டன் ஜெனி படிப்பகத்தை யும், கப்டன் லோலோ முத லுதவி நிலையத்தை யாழ். நிர்வாக உதவி அரசியல் பொறுப்பாளர் எழிலரசன் (பாப்பா) திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து உல வும் கரங்கள் மக்கள்கடையை நிழல் நிர்வாகப் பொறுப் பாளர் கண்ணன் திறந்து வைத்ததை அடுத்து தமிழீழ அரசியல் பொறுப்பாளர் மூர்த்தி அவர்களால் ஊரக பணிமனை திறந்து வைக்கப் பட்டது. இறுதியாக ஆய்வு நிறுவன உற்பத்திப் பகுதியை யாழ். மாவட்டவிசேட தளபதி தமிழ்ச்செல்வன் (தினேஸ்) திறந்து வைத்தார்.

மேஜர் சுபாஸ் விளையாட் டுத் திடலில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் ஆயிரக் கணக்கான மக்கள் முன்னிலை யில் மாலை 7.50 [illegible] பாடசாலை [illegible] உடற்பயிற்சி நிகழ்ச்சியுடன் விழா ஆரம்பமானது. தொடர்ந்து யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப் பாளர் மாறன் தலைமையுரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து விடுதலைப்புலி கள் மக்கள் முன்னணித் தலை வரின் உரை இடம் பெற்றது.

அடுத்து அங்கு அமைக்கப் பட்ட முப்பது வீடுகளின் திறப்புகளையும் உரியவர்களி டம் திரு. மகேந்திரராசா, திரு. தினேஸ், திரு. திலீப், திரு. கரிகாலன், திரு. ரூபன், செல்வி ஜெயா, திரு. [illegible] திரு. பாப்பா ஆகியோர் வழங் கினர்.

திறப்பு வழங்கிய நிகழ்ச்சி யைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் பலர் உரையாற்றினர்.

இறுதியாக வில்லிசை, நாட கம், சாந்தனின் இசை நிகழ்ச் சிகள் என்பன இடம்பெற்றன. நள்ளிரவு பன்னிரெண்டு மணி யுடன் எழுச்சிக் குடியிருப்புத் திறப்பு விழா நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன. (ச)

[illegible] உரிமைகளை ஒரு பொழுதும் பெற்றுத்தரப்போவதில்லை என் பதையும் திலீபனின் போராட் டமே [illegible] தெரி வித்தார்.


# The College of Higher Studies

## ஆனைப்பந்தி

பேராதனைப் பல்கலைக்கழக G.A.Q (92)
B.A (91) வெளிவாரி பட்டப்படிப்பு
மாணவர்களுக்கான வினாவிடை விரிவுரைகள்

ஆரம்பம்:- 30-09-1991

தமிழ் - திரு. குழந்தைவேல் அரசியல் - திரு. குமாரவேல்

B.A தமிழ் 4.00-5.00 B.A அரசியல் 5.00-6.00
G.A.Q தமிழ் 5.00-6.00 G.A.Q அரசியல் 4.00-5.00

(ஆனைப்பந்தி தனியார் வைத்தியசாலைக்கு அருகாமையில்)

## வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள்

### மாணவர் கவனத்துக்கு

பேராதனைப் பல்கலைக்கழக கல்வியாண்டு 92/93 வெளிவாரிப் பட்டப்படிப்புக்களுக்கான எமது 'தமிழ்' விரிவுரைகள் கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்ற ஆனைப்பந்தியில் உள்ள

THE COLLEGE OF HIGHER STUDIES

-இல், மட்டுமே யாழ். நகரில் நடைபெறும்.

இங்ஙனம்
K.குழந்தைவேல்

(B/3191)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 61 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.